பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANADU

[illegible] 30 [illegible] 16 [illegible] 22 [illegible] 108
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30 5 78

மலிவு... மலிவு...
உங்கள் குழந்தைகளை
குதூகலப்படுத்த... இதோ
இறக்குமதி செய்யப்பட்ட
வண்ணவண்ண, வகைவகையான
விளையாட்டுப் பொருட்கள்...
புதிய உலகுக்கு உங்கள் குழந்தைகளை
அழைத்துச்செல்ல... நாடுங்கள்
சி. சின்னத்துரை
அன் பிறதர்
யாழ்ப்பாணம் — போன் 284

மலிவு... மலிவு...
இறக்குமதி செய்யப்பட்ட
வில்லியாரு
நீரிறைக்கும் யந்திரங்கள்
CITIZEN (சிற்றிசன்)
கைக்கடிகாரங்கள்
PRESSUR COOKER
அதிசுவைக்கேற்ற
[illegible]
[illegible] தேவை [illegible]
நிறைவு செய்ய...
சி. சின்னத்துரை அன் பிறதர்
யாழ்ப்பாணம் — போன் 284

RECEIVED
PRESIDENT'S FUND
SRI LANKA
JAFFNA CAMPUS
LIBRARY

"அச்சுவேலி ப. நோ. கூ. சங்க கொள்ளை வழக்கு:

# விசாரணைசெய்ய யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அதிகாரம் கிடையாது!"

## எதிரி தரப்பில் ஆட்சேபம்; 9-ம்திகதிவரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வழக்கை விசாரணை செய்ய யாழ். மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அதிகாரமில்லை யென்று எதிரிதரப்பில் நேற்று ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜஸ்டிஸ் எஸ். எம். அப்துல்காதர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில், 40 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையடித்ததாக அருமைச்சந்திரன், ரமணாரன், உதயணன் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினமும், 2ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஜே. ஏ. பி செரிபீமும் 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். சோமசுந்தரமும் இடையராகி வாதிட்டார்கள். அரசதரப்பில் சீனியர் சட்டத்தரணி டி. எஸ். குமாரசிங்கா சட்டத்தரணி ஜி. ஜெயக்குமாரின் உதவியுடன் ஆஜராகினார்.

நீதிமன்றத்திற்கு வெளியில் ஆயுதந்தாங்கிய பொலிசாரினால் பாதுகாப்பட்டனர் நீதிமன்றத்திற்குள் சட்டத்தரணிகளும், பொதுமக்களும் நிரம்பியிருந்தனர்.

### 'அதிகாரம் இல்லை'

விசாரணை ஆரம்பமானதும், 3ம் எதிரி சார்பில் ஆதரவான சட்டத்தரணி த. சோமசுந்தரம், இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரணை செய்வதற்கு அதிகாரமில்லை' என்று கூறினார்.

சட்டத்தரணி த. சோமசுந்தரம் தொடர்ந்து வாதிட்டபோது கூறியதாவது: 'இது ஒரு மாவட்ட நீதிமன்ற குற்றவியல் வழக்காகும். அதனால் இந்நீதிமன்றத்தில் விசாரணை

(6ம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத்தில் சீர்காழி

[யாழ்ப்பாணம்]

பிரபல திரைப்பட பாடகர் திரு சீர்காழி எஸ். கோவிந்தராஜன் நேற்று இரவு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். திருச்சியிலிருந்து விமான மார்க்கமாக இவர் நேற்றிரவு பலாலி வந்துசேர்ந்தார்.

திரு. கோவிந்தராஜனும் அவரது குழுவினரும், சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்தில் நாளை இரவு இன்னிசைவிருந்தளிப்பர்.

திரு. கோவிந்தராஜன் குழுவினர் நாளை மறுதினம் வியாழக்கிழமை தமிழகம் பயணமாவார். (பரு. நிரு.)

கலாபதி கைது:

## பொலிஸ் தரப்பில் சத்தியக் கடதாசி வேண்டும்

### 2வாரத்தில்சமர்ப்பிக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

வல்வை கலாபதி கைதாகி பொலிஸ்காவலில் வைக்கப்பட்டிருந்தது தொடர்பான ஆட்கொணர்வு வழக்கில், கலாபதி கைதுசெய்யப்பட்டது 24ந் திகதிதானா என்பதற்கு பொலிஸ்தரப்பில், சத்தியக்கடதாசி ஒன்றை இரண்டு வாரத்தில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி மனுமீதான விசாரணை, உயர்நீதிமன்றத்தில் நேற்று இரண்டாவது நடவடிக்கையாக நடைபெற்றது. உயர்நீதிமன்ற நீதிபதிகளான திருவாளர்கள் கடவலம் ஏ. வைத்திலிங்கம், எஸ். சர்வானந்தா ஆகியோர் முன்னிலையில், இவ்விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேற்படி உத்தரவை பொலிஸ்தரப்பில் நீதிபதிகள் எஸ். சர்வானந்தா முன்பாக நீதிமன்றத்தை ஒத்திவைத்தார்.

[6-ம் பக்கம் பார்க்க]

செல்வி கிருஷ்ணப்பிரியா ராஜலிங்கத்தின் சக்கர நாற்காலி ஏறுமுன், செல்வன் ரகுநந்தனன் ராஜலிங்கத்தின் மிருதங்க அரங்கேற்றமும் நாளை 31ம் திகதி மாலை 6-30 மணிக்கு பல்பலப்பிட்டி மதிய சதிரேசன் கோயில் மண்டபத்தில் இடம்பெற விருக்கின்றது. இவ்விருவரும் பிரபல சங்கீதவித்வான் திருமதி சத்தியபாமா ராஜலிங்கத்தின் புதல்வர்களாவர். செல்வி கிருஷ்ணப்பிரியா தமது தாயார் திருமதி சத்தியபாமாவிடமும், செல்வன் ரகுநந்தனன் திரு. எம். சிதம்பரநாதனிடமும் சிஷ்யை பெற்றனர். செல்வி கிருஷ்ணப்பிரியாவுக்கு 14 வயது. ரகுநந்தனனுக்கு 11 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

இளைஞர்கள் கைதாவதற்கு

## கூட்டணி நடவடிக்கைக் குழு கண்டனம்

[வவுனியா]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்குழு, வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் இல்லத்தில் திரு. ரூேச் டீ வாஸ் தலைமையில் நேற்று முன்தினம் கூடியது.

இக்கூட்டத்தில், இளைஞர்கள் காரணமின்றி கைதுஞ் சாட்டப்பட்டதையும், தமிழர்களின் வீடுகள் காரணமின்றி சோதனையிடப்படுவதையும் கண்டனம்செய்து நடவடிக்கைக்குழு

[6ம் பக்கம் பார்க்க]

"புங்கங்குளம் ரயில் நிலையத்தில்

# பொல்லுகள், தடிகளுடன் 30 பேர் ரயிலில் ஏறினர்"

## சன்சோனி கமிஷன் முன் சாட்சியம்

(கண்டி)

"யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கடுத்த ரயில் நிலையமான புங்கங்குளம் ரயில் நிலையத்தில் 'மெயில்' வண்டி நிறுத்தப்பட்டதும், சுமார் 30 பேர் பொல்லுகள் தடிகளுடன், நாங்களிருந்த ரயில் சிற்றுண்டிச்சாலைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர்".

இவ்வாறு இலங்கை ரயில்வே பதுளையச் சேர்ந்த எம். டி. எல் ஜோசப் நேற்று சன்சோனி கமிஷனுக்கு சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "ஆகஸ்ட்மாதம் 17ம் திகதி இரவு, காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இரவு ("மெயில்") ரயில்வண்டி, யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் தரித்து, இரவு 6-50க்கு யாழ்ப்பாணத்தைவிட்டு புறப்பட்டது. அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்

[6-ம் பக்கம் பார்க்க]

## வாரி விளம்பரம்

### தேவை

மின் இணைப்பு வேலை, மோட்டர் திருத்துதல், ரிவைண்டிங் மற்றும் பைப் இணைத்தல் போன்ற வேலைகளுக்கு அனுபவமுள்ளவர்களும் பழகுபவர்களும் தேவை. வாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் படித்த சான்றிதழ் உள்ளவர்கட்கு முதலிடம் வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9426. கே/பா சமநாடு, யாழ்ப்பாணம். 9426

---

புதிய நவீன கடைச்சல் இயந்திரங்களில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். ஸ்ரார், 233, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 9428

---

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும் வேலை பழகுபவர்களும் தேவை சம்பளம் குறைந்து கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவிலோக் ஆர் கேற்றரிங் வேக்ஸ், நீர்வேலி. 9224

---

பனை ஓலைச் சார்வு தேவை. மில்க்வைற்-யாழ்ப்பாணம். 9425

---

பிடவை வியாபாரத்திலும் சேட் நிறுசு வியாபாரத்திலும் ஐந்து வருட அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர்களும், கடைச் சிறு ஊழியராகக் கடமையாற்றுவதற்கு 18 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரும் தேவை. உடனடியாக க. நாகமுத்து அன்சன், 48-50 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நேரடியாக சான்றுப் பத்திரங்களுடன் தொடர்புகொள்ளவும். 9420

---

தேவன்ஸ் சியாக்காய்ப் பவுடர், பற்பொடி பைக்கற் ஒட்டுவதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவாஸ் கிறைண்டிங் மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9423

---

### விற்பனைக்கு

ஒட்டுநடம் பறைச்சேரி வெளியில் இருக்கும் 10¼ பரப்பு வயல்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு எஸ். வி. சர்மா, மாத்தனை சந்தசாமி கோவிலடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் - அல்லது மனோகரா நியேட்டரில் சந்திக்கலாம். 9418

---

### அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்றவர்வேட்டித்துறை மார்க்கண்டு கணேஷ் என்பவரின் மரணசாதனமிலாச் சொத்தின் விடயத்தில்

மார்க்கண்டு கணேஷ் காலமெய்திவர் கணேஷ் கைம்பெண் வள்ளிக்கொடி மறுதாமம் இராசேஸ்வரி

மறுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம்

இல: T 1046

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தபோனவரின் மரணச்சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கெனக் பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு ஆடி மாதம் 14-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றின் கட்டளைப்படி

இ. விஸ்வலிங்கம்.
பதிவாளர்.

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 15-ம் நாளளவில் இன்று திகதியிடப்பட்டுள்ளது

ந. யோகநாமணி எல்.எல்.பி
சட்டத்தரணி,
தேசண்டமாகுரு. 9419

---

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் காளயுக்தி ஆண்டு வைகாசித் திங்கள் 18ம் நாள் (1-6-78) வியாழக்கிழமை ரேவதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 11-15 மணிக்கு மேல் 12-00 மணிக்குள் இல்லத்தில்

சி. கு. செல்லையா பிரேஷ்ட புத்திரன்
திருவளர்ச் செல்வன்
மகேந்திரன்

உரிமையாளர்: கருணா டிரேடிங் சென்டர் கொழும்பு
இயக்குனர்: லங்கா கிளாஸ் தொழிற்சாலை (வரையுள்ளது திருமலை)

கு. கதிர்வேலு மலாயன் கபே புதல்வி
திருவளர்ச் செல்வி
சாந்தநிதி

இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஷெ திருமணம் நல்லூர் திவ்ய ஜீவன சபை மண்டபத்தில் நடைபெறுவதால் தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணக்கிளை வாழ்த்தி சிறப்பிக்க வேண்டுகிறோம்

கடுக்கன் பூணல் காலை 7 மணிக்கு நடைபெறும்
வரவேற்புபசாரம் மாலை 6 — 9 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

தங்கள் அன்புள்ள

கு. கதிர்வேலுவும் பாரியாரும், ஸ்ரேஷன் முன் வீதி, கோண்டாவில்

சி. கு. செல்லையாவும் பாரியாரும், 413, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 9422

---

# "கூ. ச. கிளைக்குழுக்கள் 72 க்கு முன்பு போன்று இயங்க வேண்டும்"

## விசாரணைக்குழுமுன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச்சங்கக் கிளைக் குழுக்கள் 72ம் ஆண்டுக்கு முன் இருந்ததுபோல பூரண அதிகாரங்களுடையதாக இருக்கவேண்டும். இதன் மூலமே உள்ளூர்த் தேவைகளைக் கவனித்துப் பூர்த்தி செய்யமுடியும்"

காழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கூட்டுறவுப் புனரமைப்பு விசாரணையில்போது சாட்சியமளித்த அச்சுவேலி மனோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் சாட்சியமளித்த சட்டத்தரணி ச. லோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகம் தலைமையில் நேற்று மூன்றாவது தினமாக விசாரணை நடந்தது.

அச்சுவேலி ப. நோ. கூ. சங்கக் குழுவில் சாட்சியமளிக்க திரு ச. லோகேஸ்வரன் (தலைவர்) திரு. ஆ. வேலுப்பிள்ளை, திரு. வ. வேலாயுதம், திரு. க. சின்னத்துரை, திரு. க. வீரசிங்கம் திரு. வ. மாணிக்கம் திரு. க. கெயாதசுந்தரமூர்த்தி ஆகியோர் வந்திருந்தனர்.

திரு. ச. லோகேஸ்வரன் தமது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது: கிளைச் சங்கத்தினர் தங்களுக்குத் தேவையானவற்றை வாங்கித் தாங்கள் விற்பனை செய்ய வேண்டும். இதற்குக் கிளைகளுக்குப் பூரண அதிகாரம் வழங்கப்படவேண்டும். கிளைகள் தனித்துவத்துடன் இயங்கினால் போட்டிமனப்பான்மை ஏற்பட்டு சங்கம் சீராக இயங்கும். சங்கத்தில் உறுப்பினர் நேரடியான கலனம் செலுத்த முடியும். வேண்டுமென்று அக்கறைகாட்டாதிருத்தல், தாமதித்தல் இல்லாமல் போகும். ஒவ்வொரு கிராமவாசியும் தத்தமது சங்கத்தில் அக்கறைகொள்வான். மேற்பார்வைசெய்வதற்குச் சுலபமாக இருக்கும். தொழில் ஆபிவிருத்தியில் ஈடுபடலாம். ஆதலால் பழைய நிலைக்கே கிளைகளைக் கொண்டுவரவேண்டும்.

"தற்போதுள்ள சங்கம் உத்தியோகம் வழங்கும் தொழில் ஸ்தாபனமாகவே இருந்துவருகின்றது. இந்த நிலைமைமாறவேண்டும்.

புத்தூர்க் கிராமசபைப் பகுதிக்குத்தனியாக ஒருசங்கம் வேண்டும். சங்கநிர்வாகம் இளைஞர்மயமாக வரவழைக்கப்படவேண்டும்.

"இயக்குநர்சபையாக மக்களால் முன்போல்தெரிவுசெய்யப்படவேண்டும். அரசநிலைகள் ஆலோசனைச்சபை இருக்கவேண்டும்.

"கிளைகளில் வேலைக்கு இருந்தவர்களுக்கு வேலைவழங்கியதால் உள்ள ஒழுங்கீனம் நிறுத்தப்படவேண்டும். விவசாயிகள் சேவையை உடனுக்குடன் கவனிக்கவேண்டும்"

யாழ். மாவட்டக் கூட்டுறவுத் துறைமுக சேவை சமாசத்தில் அங்கம் வகிக்கும் 14 சங்கப் பிரதிநிதிகள் சார்பில் திரு. வே. பொன்னம்பலம், திரு. ஜே. அன்ரனி மற்றும் சில பிரதிநிதிகள் சாட்சியமளித்தனர்.

அவர்கள் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

### சமாசம் உருவான நோக்கம்

"யாழ்ப்பாணத்திலுள்ள உணவுநிதியோக நிலையத்திலும் காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய துறைமுகங்களிலும் தனிப்பட்டவர்களின் ஏகபோக கொந்தராத்து உரிமையை முறியடிக்க யொருகூட்டுறவு ஏற்றிக்கொண்டு செல்லும் பொறுப்பை ஏற்பதற்காக இச்சமாசம் உருவாக்கப்பட்டது.

### சமாசத்தில் அரசியல் செல்வாக்கு

14 சங்கங்கள் சேர்ந்து அமைக்கப்பட்ட இச்சங்கம் 1970 வரை இராசநடை போட்டுவந்தது. 70ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டபின் வடபகுதி சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் கூட்டுறவுச்சங்கக் கமிட்டியில் இடம்பெற முயற்சித்தனர். வடபகுதிச் சுதந்திரக் கட்சி அமைப்பாளரின் உதவியால் கமிட்டியில் புகுந்த சங்கத்தை இவர்கள் சீர்குலைத்தார்கள். சங்கநிதியை விரயமாக்கினார்கள். எங்கள் சங்கம் அவர்கள் பிடியில் சிக்கி சீரழிந்தது.

சுதந்திரக்கட்சி அரசில் செல்வாக்குப்பெற்றிருந்த முன்னாள் வாழ். மேயர் திரு அல்பிரட் துரையப்பாவின் உதவியால் திரு. எம். எக். பேரின்பநாயகம் சங்கத்தின் தலைவரானார். இச்சங்கத்தில் 9 உறுப்பினர்கள் உள்ளனர். பெரும்பான்மையானோர் 1963 முதல் உறுப்பினர்களாக இருந்துவருகின்றனர். ஒருவர் தலைவரின் மாமனார். இவர்கள் கண்ணை மூடிக்கொண்டு தலைவரின் செயல்களை ஆதரித்துவந்தனர். தலைவரும், அவரது மாமனாரும் கொந்தராத்துக்காரர்களாக இருப்பதால், கமிட்டியில் இருக்க முடியாது. கமிட்டிக் கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. கமிட்டியின் முடிவு சரியாக அமுல் செய்யப்படுவதில்லை.

கட்சிகளைக்கொண்ட ரூபவைக்கொண்டு இயங்கும் சங்கத்திற்குப் பாதுகாப்புடன் ஒரு நிரந்தர ஊழியர் கிடையாது. பொதுமுகாமையாளரையோ லிகிதரையோ சங்க உறுப்பினர்கள் சந்திக்க முடியாது. அவர்கள் எந்நேரமும் வெளியில் சென்றிருப்பார்கள்.

"66 வயதான இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் ஒருவர் பொதுமுகாமையாளராக இருக்கிறார். அவருக்குச் சம்பளம் 450 ரூபா. அத்துடன் அலவன்சும் உண்டு.

"புலவிரத இளைஞர்களிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவரும் லிகிதராகக் கடமையாற்றுகிறார். அவருக்கு 450 ரூபா சம்பளம். அத்துடன் அலவன்சும் உண்டு

### வேலைகள், லங்கிட்டில் பாரபட்சம்

"வேலைகள் சங்கங்களுக்குச் சரியாக பகிர்ந்து ஒதுக்கப்படுவதில்லை. கண்ணை மூடிக்கொண்டு தலைவருக்கு ஆதரவு கொடுக்கும் சங்கங்களுக்குக் கூடிய வேலை கொடுக்கப்படுகிறது. உறுப்பினர்களல்லாதவர்களும் வேலை செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். கணக்குகள் சரியாக வைக்கப்படுவதில்லை. சங்கங்களுக்குப் பணம் வழங்குவது, அவசியமற்றுத் தாமதிக்கப்படுகிறது.

"75-ம் ஆண்டு முதல் சங்கங்களுக்குக் கணக்கு முடிக்கப்படவில்லை. பொதுவிடுமுறை நாட்களுக்கான மேலதிக சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை. அதிகரிக்கப்பட்ட கணக்கு இன்னும் கணக்கில் காட்டப்படவில்லை. கணக்கு 75-ம் ஆண்டு 10 வீதமாகவும் 76-ம் ஆண்டு 20 வீதமாகவும் அதிகரிக்கப்பட்டது. கமிட்டிக் கூட்டங்களில் அங்கீகாரத்திற்கு கணக்குப் புத்தகங்கள் சமர்ப்பிக்கப்படுவதில்லை. உணவு ஆணையாளரிடமிருந்து வரும் பணம் பற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### கமிட்டி அங்கீகாரமின்றி பணம் வழங்கப்பட்டது

கடந்த 29க்கு மாகாண பொதுமுகாமையாளர் பணத்தில் கையாடப்பட்டுள்ளது. கமிட்டியின் அங்கீகாரமின்றி 10 பேருக்கு சங்க முற்பணம் வழங்கியுள்ளது. இப்பணம் பற்றிச் சரியான கணக்குக் கிடையாது. முன்னாள் தலைவருக்கும் 3 கமிட்டி உறுப்பினர்களுக்கும் செயலாளருக்கும் கமிட்டி அங்கீகார

[5-ம் பக்கம் பார்க்க]

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல: M B/1011

1. சின்னப்பு செல்லத்துரையும் பெண்
2. சிவபாக்கியமும் சுழிபுரம்

வாதி

எதிராக

முதலாம் முத்தையா லக்ஷ்மிபெண்
பாக்கியம் சுழிபுரம்

பிரதிவாதி

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டில் M B/1011-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ந்திகதி (19-6-78) திங்கட்கிழமைகாலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராவிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 3955/-வும் மேலும் ரூபா 2500/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வட்டி வீதம் வழக்கு அணைந்த திகதியாகிய 1975-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1976-ம் ஆண்டு ஆடி மாதம் 30-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 524/25 கொடுக்கவேண்டியிருப்பதாலும் (இதில் கொடுக்கப்பட்ட தொகை 3000+300)

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கும் பகுதி சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இறைகவட்டியவத்தை நிலப்பரப்பு முன்றரையும் (பர நில இலா 3 1/2) பனையும் எல்லை கிழக்கு இராமலிங்கம் பெண் வள்ளியம்மைக்குரிய காணி வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு சுபாபதி சின்னத்துரைக்குரிய காணி இதடங்கலும். தெற்கு எல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவரக்கால் பாவிப்புரிமையும்;

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும் மதிப்பாளரும்;

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
1-5-78. 9421

# கிளிநொச்சித் தொகுதியில் 4 இராணுவ முகாம்கள்

## இளைஞர்களைத்தேடி இரவுபகலாக ரோந்து

(உருத்திரபுரம்)

இராணுவத்தினர் கிளிநொச்சித் தொகுதியில் நான்கு இடங்களில் முகாம் அமைத்து தங்கியுள்ளனர்.

விசேட இறவி கோப்டர் மூலம் இந்த அழைத்தவரப்பட்ட இராணுவத்தினர் அக்கராயன்குளம், வட்டக்கச்சி, பூநகரி, விநாதபுரம் ஆகிய இடங்களில் முகாமிட்டுள்ளனர்.

இவர்கள் கிளிநொச்சித் தொகுதியில் உள்ள சகல இடங்களிலும் இரவு பகலாக வீதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர், பலரின் வீடுகளும் பரந்த சோதனைக்குள்ளாக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள சில இளைஞர்களைக் கைதுசெய்வதற்காக கொழும்பில் இருந்து வரப்பட்ட விசேட பயிற்சிபெற்ற பொலிசார் ஆறு வாலிபருக்கு மேல் கைது செய்துள்ளனர். இவர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் தலைமையில் சென்று பரந்தன், குமாரபுரம் போன்ற இடங்களிலும் தேடுதல் வேட்டை நடத்தியதாகத் தெரிகிறது. இறுதியில் கைதுசெய்யப்பட்ட வாலிபர்களை வவுனியாவிற்குக் கொண்டு சென்று அங்கிருந்து கொழும்பு கொண்டு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் இருந்துவந்த விசேட பொலிஸ் பிரிவினரிடம் 40 க்கு மேற்பட்ட வாலிபர்களின் பெயர் பட்டியல் ஒன்றும் இருந்ததாகத் தெரிகிறது.

இவ்விவகாரம் தொடர்பாக கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி வவுனியா பொலிஸ் உதவி அத்தியட்சகர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டுள்ளார். (இ)

# "தேசிய ஒருமைப்பாட்டை உருக்குலைக்கும் கோஷம்"

(ஹட்டன்)

"தமிழர்களுடைய பிரச்னைகளை வைத்து இலக்கியம் படையுங்கள் என்ற குரல் அண்மைக்காலமாக எழுந்து வருகின்றது. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எனது முயற்சிகளில் காட்டப்பட்ட அடிக்கருத்துக்கள் யாவும் தமிழர்களுடைய பிரச்னைகளுக்கு வேறுபட்டவையா என்று கேட்க விரும்புகிறேன். சாதி அமைப்புமுறை நிலமானிய அடக்குமுறைகள் வர்க்க சித்தாந்தமாக இன்று வரை எழுந்து நிற்கும் கொடுமைகள் அதிகார குணங்கள் ஆகிய யாவற்றையும் தமிழ் என்ற பதத்துக்குள் அடக்கிச் சமாளித்து விடப் பார்க்கிறார்கள். இந்தத் திசை திருப்பலில் ஒன்றே தமிழன் பிரச்னைக்காக இலக்கியம் படையுங்கள் என்ற குரலாகும்".

இவ்வாறு எழுத்தாளர் திரு. கே. டானியல் ஹட்டன் நகரசபை கல்லூரி கலை இலக்கிய மன்றம் நடாத்திய கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. செ. சுடாமணி ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. டானியல் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தமிழர்களுடைய பிரச்னைகளுக்காக இலக்கியம் படையுங்கள் என்ற இப்புதிய குரல் தேசிய ஒருமைப்பாட்டை உருக்குலைக்கும் கோஷமாகும். கலைஇலக்கியத்துறைக்கென வழக்கத்திற்கு அப்பாற்பட்ட சித்தாந்தம் இருக்க வேண்டுமென்று தமிழ் இலக்கிய விமர்சகர்கள் விரும்புவது இந்த நாட்டின் உண்மை விடுதலையை விரும்பாத நய

[5ம் பக்கம் பார்க்க]

# 'இந்தியப்பட இறக்குமதியை கட்டுப்படுத்தவேண்டும்'

## திரைப்பட ஆக்குனர் சங்க ஆரம்பக் கூட்டத்தில் கருத்து

(வெள்ளவத்தை)

"இலங்கைத் தமிழ்த் திரைப்படத்துறை முன்னேறிவரும் வேளையில் இந்தியத் திரைப்படங்களின் இறக்குமதியினால் இலங்கை தமிழ் திரைப்பட தயாரிப்புகள் பாதிக்கப்படுகின்றன. எனவே இந்தியத் திரைப்படங்களின் இறக்குமதியை திரைப்படக் கட்டுத்தாபனம் கட்டுப்படுத்தவேண்டும்."

இவ்வாறு நிர்மலா திரைப்படத்தயாரிப்பாளரும் நடிகரும் 'தெய்வம் தந்த வீடு' சினிமாக்கோப் திரைப்படத்தாதாவுமாகிய திரு. ஏ. ரகுநாதன் குறிப்பிட்டார்.

ஞாயிற்றுக்கிழமை காலை சுதந்திர மண்டபத்தில் தமிழ்த் திரைப்பட ஆக்குநர்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தயாரிப்பாளரும் நடிகருமான திரு. வி. பி. கணேசன் தலைமைவகித்தார்.

இலங்கையின் முதலாவது தமிழ்த் திரைப்படத்தைத் தயாரித்த திரு. சி. எஸ். முத்துவேல், குத்துவிளக்கு தயாரிப்பாளர், திரு. வி. எஸ். துரைராஜா, 'புதிய காற்று' கோமளிகள் தயாரிப்பாளர் திரு. எஸ். ராமநாதன், ஒளிப்பதிவாளர் எம். ஏ. சபூர், நடிகர் ஸ்ரீசங்கர் உட்பட பலர் சமுகமளித்திருந்தனர்.

மேலும், நடிகர் ஏ. ரகுநாதன் பேசுகையில், உள்ளூர் திரைப்படங்களின் வளர்ச்சியைக் கருதியே அரச திரைப்படக்கட்டுத்தாபனம் உருவாகியுள்ளது. ஆனால் திரைப்படக் கட்டுத்தாபனம் இந்தியத் திரைப்படங்களில் காட்டும் அக்கறையை இந்நாட்டில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களின் வளர்ச்சியில் காணவில்லை எடுப்பதில்லை.

திரைப்படக்கட்டுத்தாபனம் வெறும் விநியோகக் கட்டுத்தாபனமாகவே இயங்குகிறது. ஆனால் உள்ளூர் திரைப்படங்களை ஊக்குவிப்பதில்லை. இந்நிலை மாறவேண்டும். முப்பது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இலங்கையில் தமிழ்ப்படம் வெளியாகிறது. இப்பொழுது ஆண்டுக்கு மூன்று படங்கள் வரை வெளியாகிறது. தற்போது 15 படங்கள் தயாரிப்பில் இருப்பதாக அறியப்படுகிறது.

மேடைக்கலைஞர்கள் திரைப்படத்தில் நடிப்பதனால் தமிழ்த் திரைப்படங்கள் தோல்வியடைவதாக வானொலி கதாகிரியர் கூறுகிறார். இப்படிக்கூறும் வானொலி கதாகிரியர் சினிமா கதாகிரியராக வரமுடியுமா? நிறமையும் தகுதியும் உள்ளவர்கள் சுடர்விட்டு பிரகாசிப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்றார்.

வாடகைக்காற்று தயாரிப்பாளர் திரு. அ. சிவதாசன் பேசுகையில்; படங்களை தயாரிப்பதைவிட அதை திரையிடப்படும்பொழுதே பெரும் பிரச்னைகளை சந்திக்கவேண்டியுள்ளது. உள்ளூர் திரைப்படங்கள் திரையிடப்படும்பொழுது, இறக்குமதித்திரைப்படங்களை வெளியிட்டு மூறியடிக்கிறார்கள். இந்நிலை மாறவேண்டும் என்றார்.

மாத்தளை கார்த்திகேசு பேசும்பொழுது; தயாரிப்பாளர்கள் தொழில் நுட்ப கலைஞர்கள் ஒன்றுபட்டு நமது திரைப்பட வளர்ச்சிக்காக ஐக்கியப்பட்டு செயல்பட வேண்டும் என்றார்.

மற்றும் திரு. வி. எஸ். துரைராஜா, தீனதயாளன், ஜூலி எம். ஏ. சபூர், கலைச்செல்வன், எஸ். என். தனரத்தினம் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

கூட்டத்தில் தமிழ்த்திரைப்பட ஆக்குநர்சங்க நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

### இலங்கை தமிழ்த் திரைப்பட ஆக்குநர் சங்கம்

(வெள்ளவத்தை)

இலங்கை தமிழ்த்திரைப்பட வளர்ச்சியைக் கருதி அமைக்கப்பட்டுள்ள தமிழ்த் திரைப்பட ஆக்குநர்சங்க நடப்புவருட நிர்வாகிகள் விபரம்:

தலைவர்: திரு. எஸ். முத்துவேல் உபதலைவர்கள் திருவாளர்கள்: எஸ். இராமநாதன், மாத்தளை கார்த்திகேசு, செயலாளர் திரு. வி. பி. கணேசன். துணைச்செயலாளர்கள்: திரு. ஏ. ரகுநாதன், திரு. அந்தனிஜீவா, பொருளாளர்: திரு. பொ. சிவசுப்பிரமணியம், உபபொருளாளர்: திரு. க. சிவதாசன், செயற்குழுவினர் திருவாளர்கள் ஸ்ரீசங்கர் வாமதேவன் எம். ஏ. சபூர், சோமசேகரன், வி. எஸ். துரைராஜா, லீவி. டி. கொஸ்தா, எஸ். எஸ். தனரத்தினம். (இ)

## தொழிற் பயிற்சி வகுப்புகள்

(பண்டத்தரிப்பு)

பாடசாலையை விட்டு விலகியமாணவிகளுக்கான தொழிற்பயிற்சி வகுப்புகள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மனையியல், பற்றிக் ஆர்டிஜன் போன்ற துறைகளில் பாடசாலை விடுமுறை நாட்களில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றவிரும்பும் மாணவிகள் இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று மேற்படி கல்லூரி அதிபர் திருமதி க. ஆறுமுகநாதன் தெரிவித்தார். (இ)

## வட்டு. எம். பி. பார்வையிட்டார்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த வைத்தியசாலையில் நீண்டகால தேவையாக இருந்துவரும் வைத்திய அதிகாரிகளுக்கான விடுதி அமைத்தல் பிரசவ வார்ட் அமைத்தல் ஆகியவற்றிற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கத் திட்டமிட்டுள்ளதாக திரு. திருநாவுக்கரசு அங்கு தெரிவித்தார். வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் ரி. கண்ணாதன் எம். பியை வரவேற்று ஆலயத்திரியை சுற்றிக் காண்பித்தார். (இ)

# சமுதாய மறுமலர்ச்சி: அரசு புதிய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அரசு ராம அபிவிருத்திச் சங்கங்களை வளர்ச்சிபெறச் செய்து சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்த முனைந்துள்ளது. அதற்கமைய சகல ராமமுன்னேற்றச்சங்கங்களை இயக்க ஆவனசெய்யுமாறு எம்மை அரசு பணித்துள்ளது" என்று புங்குடுதீவு வசிலான் கிராமஅபிவிருத்திச்சங்கத்தின் 27வது வருடாந்த புனரமைப்புக் கூட்டத்தில் தீவுப்பகுதி தெற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

புனரமைப்புக் கூட்டம் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. கு. அ. குழந்தைவேலு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் எதிர் காலத்தில் சங்க நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்: தலைவர்: திரு கு அ குழந்தைவேலு, உப-தலைவர்: திரு. இ. தர்மபாலன், காரியதரிசி: திரு. க. ஐயாத்துரை, உப-காரியதரிசி: திரு நா. நரசிங்கம், தனாதிகாரி: திரு. சந்தானமி, கணக்குப் பரிசோதகர்களாக திருவாளர்கள் க. கயிலாயபிள்ளை, செ. வைரவநாதனும் தெரிவாகினர். [கெ உ]

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பரராஜசேகரம் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

அடுத்த மாதம் 6 ம் திகதி சப்பறத்திருவிழாவும் மறுநாள் காலை தேர் உற்சவமும் அதற்கு மறுநாள் மாலை தீர்த்தோற்சவமும் நடைபெறும். 9 ம் திகதி இரவு பூங்காவனமும் நடைபெறும்.

விழாக்காலங்களில் இரவு சமயப்பிரசங்கங்களும் இசைவிரை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ)

## டாக்டர் ரி.பி. தாமோதரம்

சாவகச்சேரி நகரில் பிறந்த டாக்டராக விளங்கிய ரி. பி. தாமோதரம் அவர்கள் பெருந்தொகையான ஏழைகளுக்கு நெடுங்காலமாக அவராது உழைத்து பெரும் புகழ்ஈட்டிய உத்தமர். இந்நகரில் எந்த நல்ல இயக்கமும் அவருடைய ஆசியையும் போதனையும் கொண்டே இயங்கிவந்துள்ளது. அவர் ஒரு மூலதனம்.

இவர் தந்தையார் திரு. தாமோதரம்பிள்ளை அவர்களே சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் தாபகராவார். இக்கல்லூரியைத் தாபித்த தனது தந்தையாரின் இலட்சியப்படி இக்கல்லூரியைப், பாதுகாத்து வளர்த்துவந்தார். தமது 81 வயதில் தமது வைத்திய சாலையில் இருந்து வீட்டை நோக்கி காரில் சென்றவர் (புகையிரத விபத்தில்) மறைந்தார்.

இவர் இலங்கையின் பல வேறு பாகங்களிலும் வைத்திய அத்தியட்சகராக விளங்கி சிறும் சிறப்பும் பெற்றதுடன் இளம் டாக்டர்களுக்கு ஒருவழிகாட்டியாகவும் விளங்கினார்.

தன்னுடைய பரம்பரைக் கோயிலாகிய சப்பச்சிறாவடி விநாயகர் கோவிலின் ஆதீனத் தலைவராகவிருந்து குடமுழுக்கு செய்வித்து கோயிலைச் சிறப்பு புனருத்தாரணம் செய்தார்.

சாவகச்சேரி நகரசபை இவர்களுடைய இல்லம் அமைந்த நெடுஞ்சாலையை 'தாமோதரம் வீதி' எனப் பெயர் சூட்டிப் பெருமை பெற்றது.

டாக்டர் அவர்களின் ஆன்மா வைத்திய நாதனாகிய இறைவன் திருவடிகளில் சாந்தியுறுக.

ஆசிரியமணி
ஆர். ரீ. சுப்பிரமணியம்

## விசாரணைக் குழு விஜயம்

(பண்டத்தரிப்பு)

கட்டுநாயகபுனரமைப்பு விசாரணைக் குழுவினர் பண்டத்தரிப்பு மலநோக்குக் கூட்டுநலச் சங்கத்திற்கு நேரில் விஜயம் செய்தனர்.

ப. நோ. கூ; சங்கத் தலைவர் திரு. எஸ். சந்தையா குழுவினரை வரவேற்று சங்கத்தின் மின்தறி ஆலை, உடை தயாரிக்கும் பகுதி உட்பட பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தார்.

இங்கு உற்பத்தியாகும் புடவைகளை குழுவினர் பார்த்து வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் புடவைகளின் தரத்திற்கு ஒப்பான தரமாக இருப்பதாக பாராட்டுத் தெரிவித்தனர்.

குழுவினருக்கு சங்கத்தில் மதிய போசன விருந்தும் அளிக்கப்பட்டது. (இ)

### அரபு மண்ணிலிருந்து வெளியேறுமாறு

# நேட்டோ நாடுகள் இஸ்ரேலை வலியுறுத்த வேண்டும்

## அமெரிக்கா கோரிக்கை

ஜெருஸலம், மே 29

மத்திய கிழக்கில் 1967ம் ஆண்டு நடைபெற்ற போரில் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து இஸ்ரேல் உடன்வெளியேற வேண்டும் என்று நேட்டோ நேச நாடுகள் இஸ்ரேல் வலியுறுத்தவேண்டும் என அமெரிக்கா நேட்டோ நாடுகளைக்கோரியுள்ளது.

ஜெருஸலம் வாஷெனி அமெரிக்காவின் இக்கருத்துப் பற்றிய செய்தியை அறிவித்தது.

அமெரிக்காவில் நடைபெற இருக்கும் நேட்டோ நாடுகளின் மகாநாட்டில் இக்கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் இதுதொடர்பான தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டுவரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிரந்தர அமைதி காண்பதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளையில் அமெரிக்கா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது நியாயமற்றது என்றும் ஒரு தலைப்பட்சமானது என்றும் இஸ்ரேல் வெளிநாட்டமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

### இந்திரா — உத்தியோகபூர்வ

# இரு காங்கிரஸ்கட்சிகளையும் இணைக்கும் முயற்சி வீண்

## கட்சிக்குள் பிணக்கையே ஏற்படுத்தும் என்கிறார் சவான்

புதுடில்லி, மே 29

இந்திய உத்தியோக பூர்வ காங்கிரஸ் கட்சியையும் இந்திரா காங்கிரஸ் கட்சியையும் இணைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவும் வீணாகுமே ஒழிய அம்முயற்சிகளினால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை.

இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் தற்காலிகத் தலைவரும் லோக்சபை எதிர்க்கட்சித் தலைவருமான திரு. வை. பி. சவான் கருத்துத் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் திரு. சுவரண்சிங் வெளிநாடுசென்றிருப்பதால் தற்காலிக மாக திரு. சவான் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் திரு. சுவரண்சிங் வெளிநாடுசென்று முன்னர் இரு காங்கிரஸ் கட்சிகளும் இணையவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார் என்றும் இதற்கான முயற்சிகள் உடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் ஐந்து கிரேஷ்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்திருந்தகருத்துக்களுக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே திரு. சவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரு காங்கிரஸ் கட்சிகளையும் இணைக்கும் முயற்சி உத்தியோகபூர்வ காங்கிரஸ் கட்சிக்குள் பிணக்குகளையே ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார். (இ)

### சர்வதேச மியூஸியம் தினம்

மாஸ்கோ, மே, 24

சர்வதேச மியூஸியம்தினம் வரலாற்றில் முதல் தடவையாகக் கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச மியூஸியம் கவுன்சிலில் 11 வது வருடாந்த மகாநாட்டில் சர்வதேச மியூஸியம் தினத்தை அனுஷ்டிப்பதுபற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் சோவியத் 250 கலைப் பொருட்காட்சிகள் வெளிநாடுகளில் நடைபெற்றது.

1965ல் சோவியத் அரசாங்க மியூஸியங்களுக்கு விஜயஞ் செய்தோர் தொகை 750 லட்சமாக இருந்தது. கடந்த ஆண்டில் மியூஸியங்களுக்கு விஜயஞ் செய்தோர் தொகை 1,400 லட்சமாக அதிகரித்தது. (இ)

### ஹோமியோபதி சங்கம்

## அமைச்சரைச் சந்திக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

ஹோமியோபதி வைத்திய முறையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்துவதற்பொருட்டு வட இலங்கை ஹோமியோபதி சங்கம் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளது.

அமைச்சரைச் சந்திப்பதற்

[5ம் பக்கம் பார்க்க]

# செய்திச்சுருக்கம்

### புதியமுறையில் கஞ்சாக்கடத்தல்

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படும் தேயிலைப்பார்சல்களில் நிகுட்டுத்தனமாக கஞ்சாவும் அனுப்பப்படுகின்றதாம்.

இந்நடவடிக்கைகளை முறியடிக்கும் பொருட்டுப் பொலிசார் தீவிரகண்காணிப்பு நடவடிக்கையையும் மேற்கொள்வார்.

புதிய கடத்தல் முறை குறித்து விபரங்களைச் சேகரித்துள்ள பொலிசார் இது தொடர்பான விசாரணைகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

### 31 லட்சம் ரூபா நஷ்டஈடு

முப்பத்தியொரு லட்ச ரூபாவிற்குமேற்பட்ட தொகையை இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் விபத்தில் சிக்கியவர்களுக்கு வழங்கியுள்ளது.

1977ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 1ம் திகதிவரை இடம்பெற்ற பஸ் விபத்துகளில் பாதிக்கப்பட்ட 2653 பேருக்கே மேற்படி நஷ்டஈட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

1976ல் ஆண்டில் 4942 பஸ் விபத்துக்கள் இடம்பெற்றன. அவற்றிற்கு நஷ்டஈடாக 33,21,545 வழங்கப்பட்டது.

### ஆயுர்வேத வைத்தியசாலை

ஆயுர்வேத வைத்தியசாலைகளை மாவட்ட ரீதியில் நாடு முழுவதும் நிறுவுவதன் மூலம் சதேச வைத்தியத் துறையை அபிவிருத்திசெய்யும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது.

இத்திட்டத்தின் அடிப்படையில் முதல்கட்டமாக காலி, திருகோணமலை, கொழும்பு தெற்கு, அம்பாறை, பொலன்னறுவை, கேகாலை, மாத்தளை நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இவ்வைத்தியசாலைகளை நிறுவுவதெனவும் இரண்டாவது கட்டமாக மாத்தறை, மட்டக்களப்பு, வவுனியா, கழுத்துறைபுத்தளம், மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் வைத்தியசாலைகளை நிறுவுவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

அரசின் இப்புதிய நடவடிக்கைகளுக்கு நிதிஉதவி அளிப்பவர்களுக்கும், வைத்தியசாலைகளை நிறுவஉதவுபவர்களுக்கும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கவும் அரசு முன்வந்துள்ளது.

### அமோக உப்பு விளைச்சல்

15 ஆயிரம் அத்தர் உப்பு இம்முறை மன்னாரில் விளைந்துள்ளதாக மன்னார் உப்பள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் இல்லாதவாறு இம்முறை உப்பு அமோகமாக விளைந்துள்ளதால் மன்னார் மாவட்டத்திற்குத் தேவையான உப்பை தாராளமாக விநியோகிக்க முடியும் என உப்பள்கூட்டுத்தாபன அதிகாரிகள் நம்புகின்றனர்.

### காலியில் புதிய தொழிற்சாலை

சுமார் பத்து லட்ச ரூபா செலவில் உரவகைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று காலியில் உள்ள கொக்கல என்ற இடத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

இத்தொழிற்சாலைக்கான முதற்கட்டவேலைகள் அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

### இவ்வருடம் டெலிவிஷன் சேவை

இலங்கையில் டெலிவிஷன் சேவையை இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிப்பதற்காக வேகமாக துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜப்பானிய உதவியுடன் இச்சேவை இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தொடர்பான வேலைகளைக் கவனிக்க ஜப்பானிய நிபுணர்களும் இங்கு வந்துள்ளனர்?

பீ. து. தா. காலமலையில் டெலிவிஷன் எதிர் அலைகளைப் பரப்பும் மத்திய நிலையமும் பிரதான காரியாலயத்தை கொழும்பிலும், எதிர் அலைப்பரப்பும் உபநிலையங்கள் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் அமைக்கப்படும். (கா)

# ஜெனரல் டிக்காகான் மீது கொலைமுயற்சி குற்றம்

## விரைவில் வழக்குத்தாக்கலாகும்

இஸ்லாமாபாத், மே 29

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் கல்பிகார் அலி பூட்டோவின் மந்திரிசபையில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் டிக்காகான் மீது கொலைமுயற்சி, மோசடி ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட உள்ளன என்று பாக் இராணுவ அரசு அறிவித்துள்ளது.

இக்குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகள் லாகூர் உச்சநீதிமன்றத்தில் விரைவில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாப் பூட்டோ கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் நடத்தியமைக்காக ஜெனரல் டிக்காகான் கடந்த மார்ச்மாதம் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (இ)

### பீகாரில் ரயில் விபத்து; 8 பேர் பலி

பட்னா, மே 29

பீகாரில் நடந்த பயங்கர ரயில்விபத்து ஒன்றில் 8 பேர் பலியானார் என்றும் 22 பேர் படுகாயமடைந்துள்ளார் என்றும் அறிக்கைப்பட்டது

பட்னாவிலிருந்து 65 கிலோமீட்டர் தொலைவில் இடம்பெற்ற இவ்விபத்தில் ரயிலின் 10 பெட்டிகளில் எஞ்ஜினையும் ஒரு பெட்டியையும் தவிர மிகுதி 9 பெட்டிகளும் தடம்புரண்டு சுக்குநூறாகிவிட்டனவாம்.


உங்களுடைய மின்சாரம்
எங்கும் - எந்நேரமும்

HONDA

ஹொண்டா
ஜெனரேட்டர்



E 3500-சர்வ சக்திவாய்ந்த எடுத்துச் செல்லக்கூடிய மின்சக்தி சாதனம்- சுயமான வோல்டேஜ் ஒழுங்குபாட்டு கருவியுடன், சிக்கன இயக்கம் AC230V-3500W & DC12V. 100Wயுடன் வைத்தியசாலை, மருத்துவ இல்லங்கள், ஹோட்டல்கள், சினிமா மண்டபங்கள் முதலியவற்றின் பாவனைக்கு கைவசம் வைத்திருக்க நேர்த்தியானது.

E1500 & EG 1000 சிறந்த செயல்முறை-எல்லா இடங்களுக்கும் எடுத்துச்செல்லக்கூடியது. கணப்பொழுதில் இயங்குவது-சக்தி மாறுபாடு இல்லாதது.
எலெக்ரிக் 4 ஸ்ரோக் எஞ்ஜின் AC230V-1500W & DC 12V. 100W & AC 230V. 1000 W & DC 12V. 100W நம்பகரமான பாவனை.

விற்பனைக்குப்பின்னான சேர்விஸ் வசதி உண்டு
இறந்தவற்றை வாங்கும் மக்களுடன்
சேர்ந்து கொள்ளுங்கள்

ஸ்டபோர்ட் மோட்டார்
கம்பெனி லிமிட்டெட்,

"ஹொண்டா ஹவுஸ்"
718/7, மருதானை ரோட், கொழும்பு - 10.
தொலைபேசி : 94362

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-பத்மினி
நடித்த
பெண் தெய்வம்

நாகம்ஸ்
(கல்கூடம்)
தினசரி
6-45, 10-00
ரஜனிகாந்த் - ஸ்ரீதேவி
நடித்த
மூன்று முடிச்சு

Rio (Jaffna)
Phone: 7607
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30 p. m.
James Coburn &
James Mason
in
Cross of Iron


## வள்ளுவர் நினைவுப் பேச்சுப் போட்டி முடிவுகள்

(நெல்லியடி)

கரணவாய் இளைஞர் முன்னேற்றக் கழகம் நடாத்திய வள்ளுவர் நினைவுப்பேச்சுப் போட்டிகளில் பின்வருவோர் பரிசில்களைப் பெற்றுள்ளனர். கீழ்ப்பிரிவு: 1-ம் இடம் கே. கௌரி 2 ம் இடம் ம. புஷ்பலிங்கம் 3 ம் இடம் எஸ். பிரபாகரன்.

மத்திய பிரிவு: 1 ம் இடம் செல்வி ச. பத்மநாதன் 2 ம் இடம் செல்வி ச. சாமுண்டீஸ்வரி 3 ம் இடம் சித்திரா காராளசிங்கம்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசில்களை நல்லூர் தேசிய அரசப்பேரவை உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் வழங்கினார். (உ)


சில தினங்கள் மட்டும்
தினசரி 4 காட்சிகள்
மனோகரா (யாழ்ப்பாணம்) எல். ஜி. ஆர்.-வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — மஞ்சுளா — நாகேஷ் நடித்த
எங்க தங்க ராஜா

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜோதி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

விடோ போன்: 7692
சிவகுமார், அல்கா
(யாழ். நகர்)
மதனமாளிகை

ராணி காட்சிதேரங்கள் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம்
(யாழ்.நகர்) சிவாஜி - மஞ்சுளா நடித்த
உத்தமன்
(சக்திமான் கலர்)

Regal (Jaffna)
Daily at 6-45, 7-30 and 9-30 p.m. only
Spy Who Went To Hell
[Cinemascope color] Spy Film

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) வெற்றிநடைபோடும் தினசரி 4 காட்சிகள் 4வது வாரம்
முத்துராமன் – சந்திரகலா நடித்த
காலங்களில் அவன் வசந்தம்
உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும்
(கலர்)
Also Showing World news in colour

சரஸ்வதி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
இன்று மட்டும் ஜெய்சங்கர் நிர்மலா நடித்த
மந்தாரட்டம்

சாந்தி யாழ். நகர் — போன் 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா, நம்பியார் நாகேஷ்
ராமன் தேடிய சீதை
புத்தம்புதிய கொப்பி

ஜூன் 3—4 காலை 8-30
Treasure Island
Scope — Color


### கிராமப்பாடசாலைகளின் தரம் உயர்வதற்கு

# பெற்றோரின் மனநிலை மாறவேண்டும்!

(கொக்குவில்)

"பாடசாலைகள் கல்லூரிகளாக மாறவேண்டுமானால் அங்கு கல்வி கற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடவேண்டும். அதற்கு அக்கிராமங்களில் வாழும் பெற்றோர்களின் மன நிலை மாறவேண்டும்.

பட்டணங்களிலுள்ள பெரிய கல்லூரிகளுக்கு பிள்ளைகளை அனுப்பிப் படிப்பிக்கவேண்டும் என்ற மன நிலை மாறி, தங்கள் கிராமத்திலுள்ள பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்கச் செய்ய வேண்டும்."

நல்லூர் தேசிய பேரவை உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் இவ்வாறு கூறினார்.

ஒவ்வொரு பெற்றோரும் அப்படிச் செய்ய முன்வந்தால் மாணவர் தொகை அதிகரிக்கும். அத்நிலையில் பாடசாலைகளை கல்லூரிகளாக மாற்றி விஞ்ஞான கூடம் அமைத்து விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கவோ, நுண்கலைப் பிரிவுகளை ஆரம்பிக்கவோ கல்விப் பகுதியிடமிருந்து ஆகவேண்டிய உதவிகளைப் பெற முடியும் என்றும் கொக்குவில் இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரியின் நிருவாகி சரஸ்வதிதேவி கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் உரையாற்றிய போது திரு. மு. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், மேலை நாடுகளில் ஆண்களும் பெண்களும் ஒரே கல்லூரியில் கற்பதனால் மாணவ மாணவிகள் மத்தியில் பல ஒழுக்கக் கேடான நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் எமது நாட்டில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக கல்லூரிகள் ஆக்கப்பட்டுள்ளன. அவ்வேளையில் கொக்குவிலுக்கு ஒரு பெண்கள் பாடசாலை இல்லை என்ற குறையைப் போக்கவே இராமகிருஷ்ண மிஷன் கலைன் பாடசாலை இன்று சாரதா மகளிர் பாடசாலையாக மாற்றப்பட்டுள்ளது.

இராமகிருஷ்ணரும், சாரதா தேவியவர்களும் எவ்வளவு ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து காட்டினார்களோ அவ்வாறு இங்கு கல்விகற்கும் மாணவிகளும் அவர்களைப்போல் ஒழுக்க சீலர்களாகவும் உலகுக்கு வழிகாட்டிகளாகவும் திகழவேண்டும் என்றார்.

## முதலை சிக்கியது

(மட்டுவில்)

ஆடு, மாடு, நாய் போன்றவற்றுக்களைப் பிடித்துத் தின்றும் கிராமவாசிகளைப் பயமுறுத்தியும் வந்த ஒரு இராட்சத முதலை, கிராம மக்கள் வைத்த பொறியில் மாட்டிக் கொண்டது. பிடிபட்ட முதலை இப்பொழுது மக்களுக்கு கண்காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கல்வயல் அடுத்துள்ள பெருங்குளம் கிராமத்தில் நடைபெற்றது.

இக்கிராமம் வயல்வெளியை ஒட்டியுள்ளது. இந்த வயல்வெளியில் ஒரு பெரிய குளமும் உள்ளது. இக்குளத்தில் ஏராளம் முதலைகள் வசித்து வருகின்றன.

இப்பொழுதிலவும் கொடுரவெப்பம் காரணமாக குளம் வற்றிவிட்டது. குளத்திலிருந்த முதலைகள் ஊருக்குள் நடமாடத் தொடங்கின. இதனால் இக் கிராமமக்களின் காற்நடைகளை இந்த முதலை வேட்டையாடியது. அத்துடன் சிறுவர் சிறுமியரையும் பயமுறுத்தியது இதனால் மக்கள் இரவில் நடமாடப் பயந்தனர்.

திரு. பஞ்சாட்சரம் என்பவர் சில வாலிபர்களின் உதவியுடன் இந்த முதலைக்குப் பொறி வைத்துப் பிடித்தார். சுமார் 8 அடி நீள முள்ள இந்த முதலையை இப்பொழுது பாடசாலை மாணவர், கிராம மக்கள் தினமும் சென்றுபார்வையிட்டு செல்கின்றனர்.

.....

## அமைச்சரை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வெள 5 பேர் கொண்ட குழு ஒன்றையும் சங்கம் நியமித்துள்ளது.

டாக்டர்கள் ஏ. கிருஷ்ணசாமி, எம். வேலுப்பிள்ளை, எஸ். சிவநேசன், பி. இராமச்சந்திரன், எஸ். ஏகாம்பரநாதன் ஆகியோர் கொண்ட குழுவே யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் தலைமையில் அமைச்சரைச் சந்திக்க உள்ளது. (இ)

.....

## தேசிய—

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வஞ்சகத்தனமான அந்நிய ஆதிக்க அரசுகளுக்கு ஆதாரமான குரல்தான் என்பதை பிரகடனப்படுத்துவது இந்த வேளை அவசியமாகிறது. எனவே தாட்சணியமின்றிச் சில நல்லெண்ணம் கொண்டவர்களிடமிருந்தும் இதற்கு எதிர்ப்புக்குரல் எழுப்ப வேண்டும்.

## கூ. ச. கிளைக்குழுக்கள்—

(10ம் பக்கத் தொடர்ச்சி)

மின்றி முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

### 1,31,939 ரூபா செலவழித்துள்ளது

கூட்டுறவு ஆணையாளரின் அதிகாரமின்றி வைப்பிலுள்ள 1,31,939 ரூபா 42 சதத்தை சங்கம் எடுத்துச் செலவழித்துள்ளது. சங்கத்தின் பணம் உபவிதிகளுக்கு மாறாக கூட்டுறவு ஆணையாளரின் அதிகாரமின்றித் தலைவரினதும் பொதுமுகாமையாளரினதும் விருப்பப்படி செலவு செய்யப்பட்டுள்ளது. சங்கங்களுக்குப் பணம் ஒழுங்காகக் கொடுக்கப்படாத அதேவேளை உபவிதிகளுக்கு மாறாகத் தனிப்பட்டவர்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

### சங்க உடைமை விபரம் கிடையாது

"சங்கத்தின் உடைமைகள் பற்றிய விபரங்கள் எதுவும் கிடையாது. கண்ணாடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து ஒரு லொறி வாங்கப்பட்டது. ஆனால் இன்னும் அந்த லொறி சுன்னாகம் ப. நோ. கூ. சங்கப்பெயரில் தான் இருக்கிறது. லொறிப் நோக்குவரத்து பற்றிப் புறம்பான கணக்குக் வைக்கொள்ளப்படுவதில்லை. சங்கத்திற்குச் சொந்தமான தட்டிக்கவத்திரம், கப்பல் ஏஜண்டு ஒருவரிடம் இருக்கிறது. 3 லொறிகளுக்குச் சொந்தக்காரரான தலைவரின் உடைமையாகவே சங்கலொறி பாவிக்கப்படுகிறது. கேள்விப்பத்திரம் கோரப்படாமல் சாக்குகள் தனிப்பட்ட முதலாளிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிறது. வழக்கமான நடைமுறையைப் பின்பற்றிக் கேள்விப்பத்திரம் கோரப்படாமல் நூல்கள் கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவர் தமது விருப்பப்படி வரைகிறார். இதன்மூலம் அவர் பெரும் பலனடைந்து வருகிறார்.

72ம் ஆண்டுக்குமுன், காங்கேசன்துறைத் துறைமுகத்தில் கொந்தராத்து வேலை முழுவதும் இச்சங்கமே செய்துவந்தது. தலைவரும், கொள்முதல் உத்தியோகத்தரும், தனிப்பட்ட கப்பல் ஏஜண்டு ஒருவருக்கு சீமெந்து, உப்பு ஏற்றுவதற்கும், உப்பு, கல்லு இறக்குவதற்கும் உதவியுள்ளார்கள். காங்கேசன் துறைக்கு வரும் உணவுக் கப்பலிருந்து பொருட்களை இறக்கவும் இவர்கள் கப்பல் ஏஜண்டுக்கு ஊக்கமளித்துள்ளனர். இதனால் சங்கத் தொழிலாளர் தனிப்பட்ட கப்பல் ஏஜண்டின் கீழ் வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் தனிப்பட்ட கப்பல் ஏஜண்டுக் முதலாளியிடமிருந்து தலைவருக்கு கமிஷன் கிடைத்தது.

பெரும்முதலாளியாக இருக்கும் சங்கத்தலைவரே சங்கத்தைச் சீர்குலைத்து தனிப்பட்ட முதலாளிகளின் நன்மைக்காக வேலைகளைக் கொடுத்து வருகிறார்.

கோளிக்கலைச் செலவாக பெருந்தொகையான பணம் கணக்குக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் இப்பணம் செலவிடப்படவில்லை. மத்தியஸ்தர் தீர்ப்புஒன்றுக்கு எதிராகச் சங்கம் அப்பீல் செய்ததினால் 5000ரூபாசெலவு ஏற்பட்டது.

சீர்கேடான நிர்வாகத்தினாலும் ஊழலினாலும் சங்கங்களுக்கு வரவேண்டிய பணம் கிடைக்கவில்லை. இதனை மூடி மறைப்பதற்காக உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவிடமிருந்து பெறுந்தொகையான பணம் வருமதி எனக் கணக்கு காட்டப்பட்டுள்ளது. பொதுமுகாமையாளர் கூட்டுறவு இலாகாவில் முன்பு ஒரு பரிசோதகராக இருந்ததினால் இதில் நல்ல அனுபவம்கண்டு அத்துடன் கணக்குப்பரிசோதகர் எல்லாரும் அவருக்கு அறிமுகமானவர்கள்.

### உடனடியாகக் கலைக்க வேண்டும்

மேற்கூறிய விஷயங்களைக் கவனத்தில் கொண்டு, தற்போதைய கமிட்டி உடனடியாக கலைக்கப்பட்டு, அனுபவம் மிக்க அரசாங்க உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமிக்கும்படி கோருகிறோம் [ச-கி]

## 5வது சர்வதேச திரைப்பட விழா

தாஷ்கந்த், மே 31

ஐந்தாவது சர்வதேச திரைப்படவிழா கடந்தவாரம் இங்கு ஆரம்பமாகியது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் வங்காள தேசம் முதலான நாடுகள் உட்பட நூற்றுக்கும் மேலான நாடுகள் இவ்விழாவில் பங்கு பெறுகின்றன.

ஆசிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சார்ந்த பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் நடிகர்களும் தாஷ்கந்துக்கு வந்துள்ளனர். (இ)

# 'ப. நோ. கூ. சங்கங்களுக்குப் பதிலாக ஐக்கிய நாணய சங்கங்கள்'

## இது பல பிரச்னைகளைத் தீர்க்கும் என்று விசாரணைக் குழு மூன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பதிலாக ஐக்கிய நாணய சங்கங்களை ஒவ்வொரு துறையினரும் ஆரம்பித்து, மாவட்ட ரீதியில் இணைந்து செயலாற்றினால் பலபிரச்னைகளுக்குத் தீர்வுகாணமுடியும்**

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கூட்டுறவு விசாரணைக்குழுமுன் சாட்சியமளித்த, கூட்டுறவு முன்னாள் வங்கியாளர் முன்னாள் பரிசோதகரும் யாழ். "சமுத்திராரேட்ஸ்" முதலாளியுமான திரு எஸ். செபமுத்து யாம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

நீதியமைச்சர் திரு கே. டபிள்யு. தேவநாயகம் தலைமையில் நடந்த விசாரணையில், திரு செபமுத்து யாம்பிள்ளை மேலும் கூறியதாவது:

'ஐக்கிய நாணயசங்கமே ஆரம்பமாக இருக்க வேண்டும். மீனவர்கள் தங்களுக்குள் புறம்பான ஐக்கிய நாணயசங்கத்தை அமைக்க வேண்டும். இதேபோல் விவசாயிகள், சிறுகைத்தொழிலாளர், மரவேலை, கட்டடவேலை செய்பவர்களும், புறம்புறம்பான சங்கங்களை அமைக்க வேண்டும். ஒரு ஐக்கிய நாணய சங்கத்தில் 50 உறுப்பினர்கள் இருக்கவேண்டும்.

### மாவட்ட சங்கங்கள்

'ஒவ்வொரு சங்கங்களும் தனித்தனியாக மாவட்ட சங்கங்களை அமைக்கவேண்டும். விவசாயிகள் ஐக்கிய நாணய சங்கம், கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனைச்சங்கங்களை அமைக்கவேண்டும் இச்சங்கங்கள் ஒன்று சேர்ந்து மாவட்ட விவசாய சங்கத்தை அமைக்க வேண்டும்

'சகல ஐக்கிய நாணய சங்கங்களும் சேர்ந்து, மாவட்ட ரீதியில் கூட்டுறவு வங்கிகளையும் ஆஸ்பத்திரிகளையும் ஆரம்பிக்க வேண்டும். உறுப்பினர்களின் தேவைக்கேற்றபடி கூட்டுறவு வங்கிகளையும், ஆஸ்பத்திரிகளையும் அமைக்கலாம்.

மாவட்டக் கூட்டு போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டது. இ. போ. ச பிராந்திய டிப்போக்களை பொறுப்பேற்று அந்தந்த பகுதி மக்கள், தங்கள் போக்குவரத்து சேவையை நடத்துவார்கள்.

### கூட்டுறவுப் பாடசாலைகள்

சகல மாவட்டங்களுக்கு சேர்ந்து மாவாணங்களை அமைக்கும். இந்த மாவாண சங்கங்கள் பாடசாலைகளை அமைக்கும். ஒன்பதுமாவாணங்களும் ஒன்பது கூட்டுறவு பாடசாலைகள் அமைக்கப்படும்

'9 மாவாண சங்கங்களும், சேர்ந்து இலங்கை கூட்டுறவு சம்மேளனத்தை அமைக்கும். இச்சம்மேளனம் கூட்டுறவின் முக்கிய நிர்வாகமாக விளங்கும்.

### களஞ்சிய சங்கம்

'பணியாளர் ஆணைக்குழுவில் கடமையாளியும் இந்த சம்மேளனம் பொறுப்பேற்கும் பணியாளர் நியமனம், பதவி உயர்வு இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, இலைப்பாறல் ஆகிய வற்றிற்கு சம்மேளனம் பொறுப்பாக இருக்கும். ஒரு பகுதியிலுள்ள எல்லா ஐக்கிய நாணய சங்கங்களும் சேர்ந்து களஞ்சிய சங்கத்தை அமைக்கும். 15 சங்கங்கள் சேர்ந்து ஒரு களஞ்சியத்தை அமைத்தால் அதில் 750 உறுப்பினர்கள் இருப்பார்கள்.

இந்த களஞ்சிய சங்கங்கள் சேர்ந்து மாவட்ட களஞ்சிய சங்கத்தை அமைக்கும். இந்த மாவட்ட களஞ்சிய சங்கங்கள் மக்களுக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்து, ஒவ்வொரு களஞ்சியங்களுக்கும் வழங்கும். இதனால் அந்தந்தப்பகுதி மக்களுக்கு எவ்வெவ்வை பொருட்கள் தேவையோ அவையாவும் கிடைக்கும். களஞ்சிய சங்கங்கள் தேவையான இடங்களில் விற்பனை டிப்போக்களை ஆரம்பிக்கும்.

ஐக்கிய நாணய சங்கங்கள் உறுப்பினர்கள் சங்கத்தில் கடன் பெற வசதியுண்டு ஆனால் பணம்காக பெறமாட்டார்கள் அவர்களுக்கு தேவையான பொருட்களை களஞ்சிய சங்கத்தில் பெறலாம்

இந்தமுறைப்படி எல்லாவற்றையும் நல்லமுறையில் நடத்தலாம். களஞ்சியத்தில், மக்களுக்குதேவையான எல்லாச் சாமான்களும் இருக்கும் தனிப்பட்ட வியாபாரிகளுடன் போட்டிபோட்டு வியாபாரம் செய்வதன் மூலம் விலைவிழுக்கு உதவக்கூடியதாக இருக்கும்.

### படித்த வாலிபருக்கு

'கூட்டுறவு களஞ்சியத்தில், படித்த வாலிபர்களை வேலைக்கு அமர்த்தலாம். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வாய்ப்பு ஏற்படும்' என்கிட்டத்தின்படி பலநோக்கு கூட்டுறவு சங்கம் இருக்காது ஒரு சங்கம் ஒரு விஷயத்தில் தான் அக்கறை காட்டவேண்டும் எல்லாவற்றிலும் அக்கறை காட்டினால். ஒன்றுமே நல்லபடி வராது, இன்றுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் எல்லாவற்றிலும் தலையிட்டு ஒன்றுமே உருப்படியாகவில்லை.

"சகல ஐக்கிய நாணய சங்கங்களும் சேர்ந்து நடத்தும் போக்குவரத்து சேவையில், பள்ளம்பட்டுமன்றி பலலொறிகளும் இருக்கும். இந்த லோறிகள் உடனுக்குடன், உணவுப் பண்டங்களையும், மற்றும் பொருட்களையும், மாவட்ட களஞ்சிய சங்கத்திலிருந்து களஞ்சிய சங்கங்களுக்கும் பின் விற்பனை டிப்போக்களுக்கும் கொண்டுசெல்லப் பயன்படுத்தப்படும்.

"இதேபோல் நடாத்தப்படும் கூட்டுறவு ஆஸ்பத்திரிகள், அரசாங்க ஆஸ்பத்திரிகளுடனும், தனியார் ஆஸ்பத்திரிகளிடனும் போட்டி போட்டு நடத்தப்படுவதால் மக்கள் பயனடைவார்கள். கூட்டுறவு ஆஸ்பத்திரியில் குறைந்த பணத்தில் சிகிச்சை பெறவாய்ப்பு இருக்கும். நல்ல வைத்திய நிபுணர்களின்சேவையும் அங்கு கிடைக்கும்.

'கூட்டுறவு இலாகா சங்கங்களை பதிவு செய்வதுடன் கூட்டுறவு சம்மேளனத்துடன் சேர்ந்து மேற்பார்வைசெய்யும் சரியாக இயங்காத சங்கங்களை கலைத்து, அங்கத்தவர்களின் நலன்களை கூட்டுறவு இலாகா பாதுகாக்கும்;

"மாவட்ட விவசாய சங்கத்திலேயே, விவசாய உத்தியோகத்தரின் காரியாலயம் இருக்க வேண்டும். அந்த உத்தியோகத்தர் கூட்டுறவு சங்கத்துடன் சேர்ந்து கடமையாற்றவேண்டும். இதேபோன்றதான மாவட்ட மீனவர் சங்கத்திலும் உத்தியோகத்தர்கள் சேர்ந்து பணியாற்றவேண்டும். மாவட்ட சிறுகைத்தொழில் சங்கத்திலும், கைத்தொழில் உத்தியோகத்தர் சேர்ந்தபணியாற்றவேண்டும்.

அரச உத்தியோகத்தர்களும் கூட்டுறவு சங்கமும் ஒன்றாக சேர்ந்துபணியாற்றவேண்டும்.

---

## அச்சுவேலி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய அதிகாரம் இல்லை. மேலும் நீதிநிர்வாக சட்டத்தின் 180 (1) பிரிவின்கீழ் பதிவாக குற்றஅத்தியட்சகர் இவ்வழக்கை பொறுத்தமட்டில் குற்றப்பத்திரத்தை மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பியாரணத்தினால் மாவட்ட நீதிமன்றத்திற்குத்தான் இவ்வழக்கை விசாரிக்க அதிகாரம் உண்டு'

'2ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜே. ஏ. பி. சேரிபிம் கூறியதாவது: 'நீதிநிர்வாக சட்ட 10 (1 ம் பிரிவின்கீழ் மேல்நீதிமன்றம் அந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை அடிப்படையில், அங்குள்ள வழக்குகளை மட்டும் விசாரணைசெய்ய அதிகாரம் உண்டு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வழக்கை மேல்நீதிமன்றத்தில் விசாரணைசெய்ய அதிகாரம் இல்லை.

1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் கூறியதாவது: ஆரம்பத்திலிருந்தே இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரணை செய்ய எவ்வித அதிகாரமுமில்லாததாலையால் இதை விசாரணைசெய்ய எவ்வித அதிகாரமுமில்லாததாலை யால் இதை விசாரணைசெய்ய முடியாது.

அரச சட்டத்தரணி குமாரவேலா, பதிலளித்து வாதிடுகையில் கூறியதாவது: 'நீதி நிர்வாக சட்டத்தில் 19-ம் பிரிவின் கீழ் மேல்நீதிமன்ற நீதிபதிக்கு, மாவட்ட நீதிபதி, நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆகியோர்களின் வழக்குகளையும் விசாரணை செய்ய அதிகாரம் உண்டு. மேலும் அவர் நீதி நிர்வாக சட்டத்தின் 43 (1)ம் பிரிவின் கீழ் ஒரு எதிரி நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டதன் பிற்பாடு, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டபின் அவர் குற்றவாளியா அல்லது குற்றவாளியா எனத் தெரிவித்தபின் அந்த எதிரி அந்த நீதிமன்றத்திற்கு அவ்வழக்கை விசாரிக்க அதிகாரம் இல்லைஎன்று ஆட்சேபனை செய்ய முடியாது

சட்டத்தரணி ஏ. சோமசுந்தரம்: 43(1)ம் பிரிவு இவ்வழக்கிற்கு பிரயோகப்படமாட்டாது. ஏனெனில் இப்பிரிவில் குற்றச்சாட்டு என்ற சொல்லு இல்லை.

சட்டத்தரணி தம்பிரத்தினம்: இந்த நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிக்க அதிகாரம் இல்லைவாதலால் 43 (11)ம் பிரிவை, பயன்படுத்த முடியாது.

இச்சட்டப்பிரச்னைகள் பற்றி மேலதிகமாக விவாதிக்க, நீதிபதி ஜூலை 9-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரிதரப்பு சட்டத்தரணிகள் பலசட்டப் புத்தகங்களை கொண்டு வந்திருந்தனர்.

இவ் வழக்கில் சாட்சிகள், கோர்ட்டில் அழைக்கப்பட்டு அறிவிக்கும் வரை வரத்தேவையில்லை என்றும், சட்டம் வந்தால் வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

---

## இளைஞர்கள் —

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கண்டித்துள்ளது.

நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. தெளிவான குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் இளைஞர்களை கைது செய்வதையும், சட்டத்திற்கு விரோதமுறையில் பல இளைஞர்களை கைது செய்து காவலில் வைப்பதையும், கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதையும், காரணமின்றி மக்களின் வீடுகளை காவல்படையினர் சோதனை செய்வதையும், வாகனங்களை மறித்து பெண்கள், பிள்ளைகள் இறக்கி அவர்களை அவமதிப்பதையும், தேவையானவர்களை தேடும் போர்வையில் கடந்த இனக்கலவரத்தோடு அதிகளாக வந்து, வயல்களிலும் பண்ணைகளிலும் குடியேறுவதை துரிதப்புறுத்துவதையும், இக்கட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்சேபித்ததுடன், நிலைமை மோசமடைந்தால் உரிய நடவடிக்கை எடுக்க பாராளுமன்ற குழுவுக்கு அதிகாரமும் வழங்கியது.

## கலாபதி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலாபதியை பொலிசார் 24த் திகதியே கைதுசெய்து, 25த் திகதி யாழ். நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்ததாக குற்றத் தடுப்புப்பகுதியைச் சேர்ந்த திரு. சௌந்தரராஜா விரத்தினம் நீதிமன்றத்தில் தனது வாதத்தை நிகழ்த்தி இதில் எந்த தவறுமில்லை யெனத் தெரிவித்தார்.

இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில், மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். புவிராஜா, கலாபதி 13-ந் திகதி யாழ். பொலிசாரால் கைது செய்யப்பட்டு 25-த் திகதியே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இது மனித உரிமைகளை நடைமுறையில் நிறைவேற்றும் செயல். இந்த நீதிமன்றமே இது சரியா பிழையா என்பதை தீர்மானிக்க வேண்டும்" என்று வாதிட்டார்.

இவ்வாதத்தை தொடர்ந்து இரண்டு வார காலத்திற்குள் கலாபதி கைது செய்யப்பட்டது 24த் திகதிதான் என்பதற்கு சத்தியக்கடதாசி பொலிஸ் தரப்பில் சமர்ப்பிக்கப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டு, வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

---

# அண்ணன் - தம்பி குத்திக் கொலை

(உருத்திரபுரம்)

அண்ணனும் தம்பியும், ஒரே நேரத்தில் குத்திக்கொலைசெய்யப்பட்ட சம்பவமொன்று கிளிநொச்சி திருநகரி நேற்று மாலை நிகழ்ந்துள்ளது.

திருநகரைச் சேர்ந்த இரத்தினசிங்கம், அரசரத்தினம் ஆகிய இருவருமே மரணமானவர்களாகும்.

இவர்களைக் குத்தியதாகச் சந்தேகப்பட்ட இருவரை ஊர்மக்கள் பொலிசாரிடம் கத்தியுடன் பிடித்து ஒப்படைத்துள்ளதாகத் தெரியவருகிறது. இக்கொலை சம்பந்தமாக கிளிநொச்சிப் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்

---


## வேம்படி மகளிர் கல்லூரி

## ஆய்வுகூட உதவியாளர் தேவை

பின்வரும் தகைமைகள் பெற்றவர்கள் யூன் 6 ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவேண்டும்.

G.C.E. O/L பரீட்சை விஞ்ஞான பாடங்களுடன் சித்தி (பௌதீகம் ஒரு பாடமாக இருத்தல் வேண்டும்)

G. C E. A/L பரீட்சையில் பௌதீகத்தில் சித்தி.

அனுபவம் உடையவர்கள் விரும்பப்படுவார்கள்.

அதிபர்

ப ஆறுமுகம்

9424


இப்பத்திரிகை 'சுதந்தர' கிரிமிட்டேட் சுதந்தரத்தராசி யாழ்ப்பாணம் வேம்படி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிடு வெளியிடப்பட்டது

The Ilanganadu P O. Box 49 Jaffna Telegram "Ilanganadu" Telephone 189. Registered as a Newspaper in SriLanka.